# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 11

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - I

நேரம்: 1 மணித்தியாலம்

---

* சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

* இலக்கம் 1 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தினை தெரிவு செய்து அதற்குரிய கூட்டில் (X) அடையாளமிடுக.

---

1. தேவை, விருப்பம் என்பவற்றின் பண்புகளை முறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1) வரையறுக்கப்பட்டவை, பரவலானவை
   2) வரையறுக்கப்பட்டவை, பொதுவானவை
   3) தோற்றுவிக்க முடியுமாயிருத்தல், அத்தியவசியமானவை
   4) பல்வகைப்பட்டவை, வரையறுக்கப்படாதவை

2. சகல வணிகங்களும் ஏதாவது சிறப்பு நோக்கம், அல்லது நோக்கங்களை நிறைவு செய்துகொள்ளும் எதிர்பார்ப்பில் செயற்படுகின்றன. வணிகமொன்றில் பொதுவாகக் காணக்கூடிய இருபிரதான நோக்கங்களாவன,
   1) இலாபம் உழைத்தலும், வேலைவாய்ப்புக்களை உருவாக்குதலும்
   2) இலாபம் உழைத்தலும், நுகர்வோர் தேவை விருப்பங்களை பூர்த்திசெய்தலும்
   3) பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தலும், வேலைவாய்ப்புக்களை உருவாக்கலும்
   4) நுகர்வோர் தேவை விருப்பங்களை பூர்த்தி செய்தலும், பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தலும்

3. கீழே x நிரலில் வணிகத்தில் அக்கறையுடைய பிரிவினர்களும் y நிரலில் அவர்களின் நோக்கங்களும் தரப்பட்டுள்ளது.

| x | y |
|---|---|
| 1. உரிமையாளர் | a) தொடர்ச்சியாக கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளல் |
| 2. முகாமையாளர் | b) தரமான பொருட்களை பெற்றுக்கொள்ளல் |
| 3. வாடிக்கையாளர் | c) வணிகத்தின் எதிர்கால வளர்ச்சி |
| 4. வழங்குநர் | d) தொழில் விருத்தியும், திருப்தியும் |

   x மற்றும் y நிரல்களை சரியாக பொருத்தும் போது கிடைக்கும் விடை எது?
   1) 1-a, 2-b, 3-c, 4-d    2) 1-a, 2-c, 3-b, 4-d
   3) 1-c, 2-d, 3-b, 4-a    4) 1-c, 2-b, 3-d, 4-a

4. வணிகச் சூழலிலுள்ள சூழற் காரணிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.
   a) உரிமையாளர்    b) வழங்குநர்    c) ஊழியர்    d) போட்டியாளர்
   e) முகாமையாளர்    f) வாடிக்கையாளர்
   இவற்றுள் புறச் சூழலிலுள்ள காரணிகளாவன,
   1) a, b, c    2) a,b,d    3) b,d,f    4) b,c,f

5. "வணிகச் சூழலில் செயற்படுகின்ற அக மற்றும் புறச் சூழல் காரணிகள் வணிகங்களில் சாதகமான, பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும்."
   வணிகத்தின் அகச் சூழலிலுள்ள சாதகமான தாக்கத்தையும், வணிகத்தின் புறச்சூழலிலுள்ள பாதகமான தாக்கத்தையும் ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?
   1) பலம், மற்றும் பலவீனம்    2) பலம், மற்றும் அச்சுருத்தல்கள்
   3) வாய்ப்பு மற்றும் அச்சுருத்தல்கள்    4) பலவீனம் மற்றும் அச்சுருத்தல்கள்

6. ஒப்பந்தங்களை மேற்கொள்ளல், சொத்துக்களை கொள்வனவு செய்தல், வங்கிக்கடன் பெறுதல் போன்ற கருமங்களை வணிகத்தின் பெயரில் மேற்கொள்ள முடியாத வணிக அமைப்பு அழைக்கப்படுவது,
   1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி எனவாகும் 2) கூட்டுறவு எனவாகும்
   3) அரச கூட்டுத் தாபனங்கள் எனவாகும் 4) பங்குடமை வணிகம் எனவாகும்

7. 2007ம் ஆண்டில் 7ம் இலக்க கம்பனிச்சட்டம் பங்குடமை வணிகம் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள ஒழுங்கு முறையொன்று
   1) பங்குடமையில் உச்ச பங்காளர் எண்ணிக்கை 20 பேர் இருத்தல் வேண்டும்
   2) ஆரம்ப மூலதனம் ரூபா 1000 அல்லது அதனைவிட அதிகமாயின் எழுத்து மூலம் ஒப்பந்தமொன்று இருத்தல் வேண்டும்
   3) இலாபநட்டங்களை சமமாக பகிர்ந்துகொள்ள வேண்டும்
   4) சகல பங்காளரும் மூலதனத்திற்கு சமமாகப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்

8. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அனுகூலங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?
   1) சட்ட ஆளுமை காணப்படல், வரையறுக்கப்படாத பொறுப்பு, தொடர்ந்தியங்கும் தன்மை
   2) சட்ட ஆளுமை காணப்படல், வரையறுக்கப்படாத பொறுப்பு, தொடர்ந்தியங்கும் தன்மை
   3) சட்ட ஆளுமை காணப்படாமை, வரையறுக்கப்படாத பொறுப்பு, தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை
   4) சட்ட ஆளுமை காணப்படாமை, வரையறுக்கப்படாத பொறுப்பு, தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை

9. வணிக நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன,
   a) வரையறுக்கப்பட்ட சில்மா கம்பனி
   b) பெரேரா அன்ட் சன்ஸ் (பெரேரா மற்றும் பிள்ளைகள்)
   c) ஹிரியால பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
   d) ஸ்டார் ஸ்டோர்ஸ்
   e) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

   மேற்குறிப்பிட்ட வணிக நிறுவனங்களுள் சட்ட ஆளுமை கொண்ட வணிக அமைப்புக்கள் எவை?
   1) a,b,c 2) a,c,e 3) b,c,d 4) b,c,e

10. வணிகர்களுக்கு மாத்திரமன்றி எந்தவொரு தனிநபருக்கும் தேவையான சந்தர்ப்பங்களின் பணத்தை வைப்புச் செய்வதற்கும், அவ் வைப்பினை மீளப் பற்றுவதற்கும் முடியுமான வைப்பாவது
   1) சேமிப்பு வைப்பு 2) நிலையான வைப்பு
   3) நடைமுறைவைப்பு 4) காலவைப்பு

11. சில்லறை வியாபாரம் மற்றும் மொத்தவியாபாரம் என்பவற்றின் பண்புகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.
   a) இறுதி நுகர்வோனுக்கு பொருட்களை விற்பனை செய்தல்
   b) வியாபாரக் கழிவினை வழங்கல்
   c) மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் வகைகளை மாத்திரம் விற்பனை செய்தல்
   d) ஒப்பீட்டு ரீதியில் விலை அதிகம்
   e) நுகர்வோருடன் நேரடியாகக் கொடுக்கல் வாங்கல் செய்யாமை
   f) பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்தல்

   மேலே தரப்பட்ட பண்புகளில் மொத்த வியாபாரத்திற்குரிய பண்புளை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
   1) a,b,c 2) a,d,e 3) b,c,e 4) b,d,f

12. நிறுவனமொன்றினுள் பல்வேறு பிரிவினரிடையே செய்திகள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுதல் (1)............................................ எனப்படுவதுடன், வாடிக்கையாளர், வழங்குனர் போன்ற வெளியகப் பிரிவினருடன் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல் (2).................................... எனவும் அழைக்கப்படும்.

   மேலே தரப்பட்ட கூற்றில் (1), (2) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை உள்ளடக்கிய விடை எது?
   1) அகத்தொடர்பாடல், புறத் தொடர்பாடல்
   2) புறத்தொடர்பாடல், அகத் தொடர்பாடல்
   3) அகத் தொடர்பாடல், இலத்திரனியல் தொடர்பாடல்
   4) புறத் தொடர்பாடல், வாய்மொழி மூலத் தொடர்பாடல்

13. பின்வரும் பிரிவினர்களுள் காப்புறுதி செய்யும் உரிமையற்ற பிரிவினராகக் குறிப்பிடக் கூடியவர்கள்,
    1) கணவன் மற்றும் மனைவி தமது ஆயுளை ஒருவருக்கொருவர் காப்புறுதி செய்தல்
    2) ஆதானங்களின் சட்டபூர்வ உரிமையாளர் அதனைக்காப்புறுதி செய்தல்
    3) கடன்கொடுநர், தான் வழங்கிய கடனின் பெறுமதிவரை கடன்பட்டவரைக் காப்புறுதி செய்தல்
    4) பெற்றோர் தமது பிள்ளைகளைக் காப்புறுதி செய்தல்

14. கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தல், டீசலுக்கான விலையினைக் குறைத்தல், விமானக்கம்பனியொன்று விமானங்களைக் கொள்வனவு செய்தல், கிராமப்பகுதிகளிலுள்ள பழுதடைந்த பாதைகளை கொங்கிறீட் இட்டு செப்பமிடுதல் என்பவற்றுடன் தொடர்புடைய போக்குவரத்து மூலங்களை முறையாகக் காட்டும் விடை எது?
    1) வழி, ஊடகம், வலு, தரிப்பிடம் 2) ஊடகம், வழி, தரிப்பிடம், வலு
    3) தரிப்பிடம், வலு, ஊடகம், வழி 4) வலு, தரிப்பிடம், வழி, ஊடகம்

15. வணிகக் கருமங்கள் திட்டமிட்டவாறு இடம்பெறுகின்றதா என்பதைத் தேடிப்பார்த்தலும் அவ்வாறு இடம் பெறாவிடின் குறைபாடுகளை இனம்கண்டு அவற்றைத் திருத்தும் செயன்முறை அழைக்கப்படுவது
    1) திட்டமிடல் எனவாகும் 2) ஒழுங்கமைத்தல் எனவாகும்
    3) நெறிப்படுத்தல் எனவாகும் 4) கட்டுப்படுத்தல் எனவாகும்

16. சந்தைப்படுத்தல் கலவை / மாறிகளில் வணிகத்திற்கு வருமானத்தை பெற்றுக்கொடுக்கின்ற மாறி எது?
    1) உற்பத்திப் பொருளாகும் 2) விலையாகும்
    3) இடமாகும் 4) மேம்படுத்தலாகும்

17. உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக ரூபா 5000 பெறுமதியான பொருட்களை பற்றியுள்ளார். இது கணக்கிட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கமாவது.
    1) சொத்து குறைந்து சொத்து அதிகரிக்கும்
    2) சொத்து குறைந்து உரிமை அதிகரிக்கும்
    3) சொத்து குறைந்து உரிமை குறைவடையும்
    4) சொத்து குறைந்து பொறுப்பு அதிகரிக்கும்.

18. பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது
    A. நிகழ்காலக் கடப்பாடு காணப்பட
    B. வணிகத்திற்கு கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்
    C. எதிர்காலத்தில் பொருளாதார நலன்கள் வணிகத்தினுள் உட்பாய்ச்சப்படல்
    D. கடந்தகாலக் கொடுக்கல்வாங்கலொன்றின் பெறுபேறாகக் காணப்படல்
    மேலே தரப்பட்ட தகவல்களில் சொத்துக்குரிய பண்புகளை மாத்திரம் காட்டும் விடை எது?
    1) A, B மாத்திரம் 2) B,D மாத்திரம் 3) B, C மாத்திரம் 4) A, C மாத்திரம்

19. வணிகமொன்றிற்குரிய பின்வரும் கணக்குவகைகளுள் முறையே சொத்துக்கணக்கு, பொறுப்புக் கணக்கு என்பவற்றிற்குரிய கணக்குகளாவன
    1) கட்டடக் கணக்கு, விற்பனைக் கணக்கு
    2) கட்டட வாடகைக் கணக்கு, கடன்கொடுநர் கணக்கு
    3) கடன்படுநர் கணக்கு, செலுத்த வேண்டிய மின்சாரக் கணக்கு
    4) விற்பனைக் கணக்கு, கடன் கொடுநர் கணக்கு

20. ராஜா என்பவர் 2018 மார்ச் 20ம் திகதி தனது வணிகத்திற்கு மேலதிக மூலதனமாக ரூபா 300 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றை வழங்கினார். இதனைப் பதிவுசெய்வதற்குரிய சரியான இரட்டைப பதிவினைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1) | மேலதிக மூலதனக் கணக்கு | வரவு ரூபா 300 000 | |
| | மோட்டார் வாகனக் கணக்கு | செலவு | ரூபா 300 000 |
| 2) | மோட்டார் வாகனக் கணக்கு | வரவு ரூபா 300 000 | |
| | காசுக் கணக்கு | செலவு | ரூபா 300 000 |
| 3) | மோட்டார் வாகனக் கணக்கு | வரவு ரூபா 300 000 | |
| | மூலதனக் கணக்கு | செலவு | ரூபா 300 000 |
| 4) | மூலதனக் கணக்கு | வரவு ரூபா 300 000 | |
| | மோட்டார் வாகனக் கணக்கு | செலவு | ரூபா 300 000 |

21. கடன்கொள்வனவு மற்றும் காசு விற்பனை என்பவற்றைப் பதிவு செய்வதற்கு பயன்படுத்துகின்ற மூல ஆவணமாக முறையே அமைவது,
   1) கொள்வனவு நாட்குறிப்பும் விற்பனை நாட்குறிப்பேடுமாகும்
   2) கொள்வனவுப்பட்டியலும், விற்பனைப்பட்டியலுமாகும்
   3) கொள்வனவுப்பட்டியலும், பற்றுச்சீட்டுமாகும்
   4) கொள்வனவுக் கணக்கும், விற்பனைக் கணக்குமாகும்

22. காசேடானது இரட்டைக் கருமங்களை மேற்கொள்வதாக கூறப்படுகின்றது. அந்த இரட்டைக் கருமங்களாவன,
   1) வரவு மற்றும் செலவு என்றவாறு செயற்படல்
   2) துணையேடாகவும் பேரேடாகவும் செயற்படல்
   3) ஆரம்ப மீதியும் இறுதி மீதியும் காணப்படல்
   4) துணையேடாகவும், மூல ஆவணமாகவும் செயற்படல்

23. கடன்பட்டோரிடமிருந்து கிடைத்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படும்போது
   1) வங்கி மீதி குறைவடைந்து கடன்பட்டோர் மீதியும் குறைவடையும்
   2) வங்கி மீதி அதிகரித்து கடன்பட்டோர் மீதி குறைவடையும்
   3) வங்கிமீதியும் கடன்பட்டோர் மீதியும் அதிகரிக்கும்
   4) வங்கி மீதி குறைவடைந்து கடன்பட்டோர் மீதி அதிகரிக்கும்

24. சுமதி வணிகத்தின் 2017.12.31 இல் வங்கிக்கணக்கு மீதி ரூபா 24 000 ஆகக் காணப்பட்டதுடன் அம்மாதத்தின் வங்கிக் கூற்று மீதி ரூபா 18 000 ஆகவும் காணப்பட்டது. இவ்வேறுபாட்டுக்களை காரணமாக இருக்கக் கூடியது
   1) நிலையியற் கட்டளையின் பேரில் ரூபா 6000 காப்புறுதித்தவணைக் கட்டணம் வங்கியால் செலுத்தப்பட்டது.
   2) கடன்பட்டோர் வங்கியில் நேரடி வைப்புச் செய்த காசு ரூபா 6000
   3) வழங்கப்பட்டும் இன்னும் கொடுப்பனவுக்கு முன்வைக்கப்படாத காசோலை ரூபா 6000 ஆகும்.
   4) வங்கிக்கு நேரடியாக ரூபா 6000 பங்கிலாபம் கிடைக்கப்பெறல்.

25. கடன்பட்டோனான ரோசான் தனது கடனாகிய ரூபா 10 000 வை காசாக மீளச் செலுத்திய போது குறைத்த கழிவு 5% மாகும். இக் கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | கடன்பட்டோர் கணக்கு | வரவு | 10 000 | |
| | கொடுத்த கழிவுக் கணக்கு | செலவு | | 500 |
| | காசுக் கணக்கு | செலவு | | 9 500 |
| 2) | கொடுத்த கழிவுக் கணக்கு | வரவு | 500 | |
| | காசுக் கணக்கு | வரவு | 9 500 | |
| | கடன்பட்டோர் கணக்கு | செலவு | | 10 000 |
| 3) | காசுக் கணக்கு | வரவு | 10 000 | |
| | கடன்பட்டோர் கணக்கு | செலவு | | 9 500 |
| | பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | | 500 |
| 4) | காசுக் கணக்கு | வரவு | 10 000 | |
| | கடன்பட்டோன் கணக்கு | செலவு | | 10 000 |

26. நிஸாம் வணிகத்தின் 2018.01.01இல் சில்லறைக்காசேட்டு மீதி ரூபா 800 ஆகக் காணப்பட்டதுடன். அத்திகதியில் பிரதம காசாளரினால் ரூபா 3200 வழங்கப்பட்டது. ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட சில்லறைச் செலவுகளின் பெறுமதி ரூபா 3200 ஆகும். அந்நிறுவனத்தின் சில்லறைக் காசு வசக் கட்டின் பெறுமதி எவ்வளவு
   1) ரூ. 800 ஆகும்  2) ரூ. 3200 ஆகும்  3) ரூ. 3500 ஆகும்  4). ரூ. 4000 ஆகும்

27. பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுள் கொள்வனவு நாட்குறிப்பில் பதிவு செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல் எது?
   1) ரூபா 70 000 பெறுமதியான இயந்திரமொன்று சிங்கர் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தல்
   2) பொருட்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 20 000
   3) கடன் கொடுநரிடமிருந்து ரூபா 15 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு
   4) பொருட்களின் கடன் கொள்வனவு ரூபா 60 000

28. ரூபா 50 000 பெறுமதியான பொருட்கள் சாதிக்கீனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதனைப்பதிவு செய்வதற்குரிய மூல ஆவணம்
    1) பற்றுச் சீட்டாகும்
    2) விற்பனைப் பட்டியலாகும்
    3) கொள்வனவுப் பட்டியலாகும்
    4) கொடுப்பனவுக் கைச்சாத்தாகும்

29. கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சிறியதொரு விளம்பலை வழங்குகின்ற முதன்மை ஏடு
    1) விற்பனை நாட்குறிப்பாகும்
    2) கொள்வனவு நாட்குறிப்பாகும்
    3) பொது நாட்குறிப்பேடாகும்
    4) மேற்குறிப்பிட்ட சகலதுமாகும்

30. வணிகமொன்றின் பரீட்சை மீதியின் வரவுப்பக்கத்தின் மொத்தம் ரூபா 265 000 ஆகும். செலவுப் பக்கத்தின் மொத்தம் ரூபா 268 000 ஆகும். இவ்வணிகத்தில் தொங்கல் கணக்கில் பதிவு செய்யவேண்டிய தொகையையும் பக்கத்தையும் காட்டும் சரியான விடை எது?
    1) ரூபா 3000 வரவுப்பக்கமாகும்
    2) ரூபா 3000 செலவுப்பக்கமாகும்
    3) ரூபா 265 000 வரவுப்பக்கமாகும்
    4) ரூபா 268 000 செலவுப்பக்கமாகும்

31. ''உடனடிப் பணப்பரிமாற்றத்திட்காக தற்காலத்தில் கைத்தொலைபேசிகள் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.'' இக்கருத்தினை உறுதிப்படுத்தாத கூற்று பின்வருவனவற்றுள் எதுவாகும்.
    1) விலை மட்டங்களை அறிந்து கொள்வதற்கு இணைய வலையமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்ளல்
    2) குறுஞ் செய்திகளினூடாக விற்பனைச் சேவைகளை அறிந்து கொள்ளல்
    3) மாதாந்த வங்கிக் கூற்றினைப் பெற்றுக் கொள்ளமுடிதல்
    4) ஒருவரிடமிருந்து சட்டரீதியான பணத்தொகையைப் பெற்றுக்கொள்ளுதல்

32. கணக்குப் பதவிவின்போது ஏற்பட்ட வழுவை திருத்துவதற்குரிய பொதுக்குறிப்பேட்டுப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனத் திருத்துதல் கணக்கு வரவு | | 50 000 |
| மோட்டார் வாகனக் கணக்கு | செலவு | 50 000 |

    கணக்குப் பதிவின் போது ஏற்பட்ட வழுவை சரியாகக் காட்டும் விடை எது?
    1) மோட்டார் வாகனக் கொள்வனவு ரூபா 50 000 மோட்டார் வாகனத் திருத்துதல் செலவாகப் பதிவு செய்யப்படல்
    2) மோட்டார் வாகனத் திருத்துதல் செலவு ரூபா 50 000 முழுமையாகப் பதிவு செய்யப் படாது விடுபடல்
    3) மோட்டார் வாகனத் திருத்துதல் செலவு ரூபா 50 000 மோட்டார் வாகனக் கணக்கில் வரவு வைக்கப்படல்
    4) மோட்டார் வாகனக் கொள்வனவு ரூபா 50 000 முழுமையாகப் பதிவு செய்யப்படாது விடுபடல்

33. பரீட்சை மீதியொன்றைத் தயாரிப்பதன் பிரதான நோக்கமாவது
    1) சொத்துக்களின் கூட்டுத்தொகை பொறுப்புக்களில் கூட்டுத் தொகைக்குச் சமம் என்பதைக் காட்டுவதாகும்
    2) கணக்கீட்டுப் பதிவுகள் கணித ரீதியில் சரியானது என்பதை உறுதிப்படுத்துவதாகும்
    3) வருமானங்களின் கூட்டுத் தொகைக்கு செலவுகளின் கூட்டுத்தொகை சமமம் என்பததைக் காட்டுவதாகும்
    4) பேரேட்டுக் கணக்குகளில் சரியாகப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

34. வணிகமொன்று 2015.01.01 இல் ரூபா 550 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்ததுடன், அதன் பயன்படு ஆயுற்காலம் 10 வருடங்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 2017.12.31ல் நிதி நிலமைக் கூற்றில் காட்டவேண்டிய மோட்டார் வாகனத்தின் தேறிய பெறுமதி எவ்வளவு?
    1) ரூபா 385 000 ஆகும்
    2) ரூபா 400 000 ஆகும்
    3) ரூபா 450 000 ஆகும்
    4) ரூபா 500 000 ஆகும்

35. வணிகத்திற்குச் சொந்தமான கட்டடமொன்றின் ஒரு பகுதி வேறொரு வணிகமொன்றிற்கு 2017.01.01 இலிருந்து மாதாந்தம் ரூபா 3000 வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2017.12.31ல் முடிவடையும் வருடத்திற்கு காசாக கிடைக்கப் பெற்ற வாடகை வருமானம் ரூபா 24 000 ஆகும்.
மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான சரியான கூற்று எது?
   1) 2017.12.31ல் வணிகத்தின் நடைமுறைபொறுப்பு ரூபா 12 000 ஆகும்.
   2) 2017.12.31ல் முற்பணமாக கிடைத்த வாடகை ரூ. 21 000 ஆகும்.
   3) 2017.12. 31ல் முடிவடையும் வருடத்தில் வருமானக் கூற்றில் காட்டவேண்டிய கட்டட வாடகை வருமானம் ரூபா 24 000 ஆகும்.
   4) 2017.12.31ல் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 12 000 ஆகும்.

36. கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் உதவியுடன் 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குவிடையளிக்க.
2017.12.31ல் குணவர்தன வணிகத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில மீதிகள் கீழே தரப்பட்டுளன.

| | ரூபா |
|---|---|
| இருப்பு (2017.01.01ல்) | 25 000 |
| கொள்வனவு | 160 000 |
| விற்பனை | 320 000 |
| உள்வந்த வண்டிக் கூலி | 5 000 |
| கொடுத்த கழிவு | 4 000 |
| விளம்பரச் செலவு | 15 000 |
| கட்டடம் (கொ.வி.) | 400 000 |
| காரியாலய உபகரணங்கள் (2017.01.01 இல் கொள்வனவு செய்தது) | 200 000 |
| கட்டட பெறுமானத் தேய்வு ஏற்பாடு (2017.01.01) | 80 000 |
| மின்சாரம் | 12 000 |
| கட்டட வாடகை | 30 000 |
| 12% வங்கிக் கடன் (2017.01.01ல் பெற்றது) | 300 000 |
| கடன்பட்டோர் | 10 000 |
| காப்புறுதி | 8 000 |
| காசு | 20 000 |

மேலதிகத் தகவல்கள்
   1) காரியாலய உபகரணங்கள், கட்டடம் என்பவற்றிற்கு கிரயத்தில் வருடாந்தம் 10% ம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்
   2) 2017.12.31ல் சரக்கிருப்பின் பெறுமதி ரூபா 15 000 ஆகும்.

36. இவ்வணிகத்தின் 2017.12.31ல் முடிவடையும் வருடத்திற்கான விற்பனைக் கிரயம் எவ்வளவு?
   1) ரூ. 160 000   2) ரூ. 170 000
   3) ரூ. 175 000   4) ரூ. 1900 000

37. இவ்வணிகத்தின் 2017.12.31ல் முடிவடையும் வருடத்திற்கான மொத்த இலாபம் எவ்வளவு?
   1) ரூ 1450 000   2) ரூ 155 000
   3) ரூ. 160 000   4) ரூ. 165 000

38. இவ்வணிகத்தின் 2017.12.31ல் முடிவடையும் வருடத்தில் இலாப நட்டக் கூற்றில் காட்டவேண்டிய நிர்வாகச் செலவின் மொத்தம் எவ்வளவு?
   1) ரூபா 50 000   2) ரூபா 60 000   3) ரூபா 90 000   4) ரூபா 110 000

39. 2017.12.31ல் இவ்வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி எவ்வளவு?
   1) ரூபா 600 000   2) ரூபா 520 000   3) ரூபா 480 000   4) ரூபா 460 000

40. 2017.12.31ல் இவ்வணிகத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?
   1) ரூபா 30 000   2) ரூபா 45 000   3) ரூபா 490 000   4) ரூபா 505 000

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 11

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - II**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - II

நேரம்: 2 மணித்தியாலங்கள்

**கவனிக்கவும் :-**

முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் நிகழ்வின் உதவியுடன் (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

வருணா சிவதாசன் "வருணா கொம்." எனும் பெயரில் கையடக்கத் தொலைபேசிகளை திருத்துதல் மற்றும் விற்பனை செய்தல் வியாபார நிலையமொன்றை நாளாந்தம் பாரியளவு மக்கள் தொகையினர் வந்துசெல்லும் குருநாகல் பேருந்து நிலையத்திலுள்ள சிறப்புச் சந்தையில் நடாத்திச் செல்கின்றார். இவ் வியாபார நிலையத்தில் தொலைபேசிகளை திருத்துவது தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற ஊழியரொருவர் வேலை செய்கின்றார். வருணாவின் சகோதரரான அருண் சிவதாசன் திறந்த பல்கலைக்கழகத்தில் கணிணித் திருத்தம் தொடர்பிலான பாடநெறியைக் கற்றுச் சித்தியடைந்த பின்னர் வருணாவின் வணிகத்தில் இணைந்து கொண்டார். அதன் பின்னர் அங்கு கணிணித்திருத்தம் மற்றும் விற்பனை என்பவையும் மேற்கொள்ளப்பட்டது.

2018 மார்ச் 01 இல் வருணா கொம் வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| காசு | 200 000 |
| கடன்பட்டோர் | 40 000 |
| கடன் கொடுநர் | 25 000 |
| 10% வங்கிக்கடன் | 120 000 |
| தளபாடமும் உபகரணங்களும் | 240 000 |
| ஆரம்ப இருப்பு | 85 000 |

2018 மார்ச் 10 இல் அருண் சிவதாசன் வணிகத்தில் இணைந்து கொண்டதுடன் அதன் பெயரானது வருனா A.Com என மாற்றப்பட்டது. அருண் அத்திகதியில் காசாக ரூபா 500 000 வையும், ரூபா 200 000 பெறுமதியான பழுதுபார்த்தல் உபகரணங்களையம் வணிகத்திற்கு வழங்கினார்.

2018 மார்ச் 10 இன் பின்னர் பின்வரும் காசுக்கொடுக்கல்வாங்கல்கள் வணிகத்தில் இடம் பெற்றன.

- கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசிகளின் கொள்வனவு — ரூ. 650 000
- மின்சாரக் கட்டணம் செலுத்தியது — ரூ. 8000
- ஊழியர் சம்பளம் — ரூ. 40 000
- நிறுவன வாடகை — ரூ. 50 000
- கணினி மற்றும் கைத்தொலைபேசிகளின் பழுதுபார்த்தல் வருமானம் — ரூ. 400 000
- கணினி மற்றும் கைத்தொலைபேசிகளின் விற்பனை வருமானம் — ரூ. 500 000
- விசைப்பலகை தாங்கிகளுக்கான செலவுகள் — ரூ. 10 000
- சகல வாடிக்கையாளர்களுக்கும் நிறுவனம் தான் தயாரித்த விசைப் பலகை தாங்கியொன்றை இலவசமாக வழங்கும்.
- 2018 மார்ச் 31இல் எஞ்சிய பொருட்கள் எதுவும் இருக்கவில்லை.
- 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து இப்பாகமுவ நகரத்தில் புதிய கிளையொன்றைம் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

i) அ) "வருணா A.Com" வணிகமானது எவ்வணிக அமைப்புவகைக்குரியது

ஆ) "வருணா A. Com" வணிகத்தின் பலமொன்றையும் வாய்ப்பொன்றையும் தருக.

ii) “வருணா A. Com” வணிகத்தைப் பதிவு செய்யவேண்டியது கட்டாயமல்ல

அ) நீங்கள் இக் கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

ஆ) உங்களது விடைக்கான காரணத்தைத் தருக.

iii) அ) வருணா A. Com வணிகம் உரித்துடைய வணிக அமைப்பு வகையின் இரு அனுகூலங்களைத் தருக.

ஆ) வருணா A. Com வணிகம் உரித்துடைய வணிக அமைப்பின் இரு பிரதிகூலங்களைத் தருக.

iv) அ) இந்நிகழ்வில் திட்டமிடல் கருமத்துடன் தொடர்புடையதாக குறிப்பிடப்படுகின்ற உதாரணமொன்றைத் தருக.

ஆ) சகல வாடிக்கையாளர்களுக்கும் ஒவ்வொரு விசைப் பலகைத் தாங்கியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொடுத்தல்.” இது சந்தைப்படுத்தலில் எக்கலவையில் உட்படுத்தப்படுகின்றது.

v) *2018* மார்ச் *10* இல் “வருணா A.Com ” வணிகத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டினை பெறுமதிகளுடன் காட்டுக.

vi) அ) *2018* மார்ச் மாதத்திற்குரிய வங்கிகடன் வட்டியைக் கணிக்க.

ஆ) *2018* மார்ச் மாதத்திற்கான வங்கிக் கடன் வட்டி செலுத்தப் படவில்லையாயின், அதனைக் கணக்குகளில் பதிவு செய்வதற்குரிய பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினை பெறுமதிகளுடன் எழுதிக்காட்டுக.

vii) *2018* மார்ச் *31* இல் காசுக்கணக்கைத் தயாரித்து காசு மீதியினைக் கணிக்க.

viii) *2018* மார்ச் *31* இல் வருணா A.Com வணிகத்தின்

அ) நடைமுறையல்லாச் சொத்தொன்றையும்

ஆ) நடைமுறையல்லா பொறுப்பொன்றையும் பெறுமதிகளுடன் தருக.

ix) *2018* மார்ச் *31*ல் முடிவடையும் வருடத்திற்கான தேறிய இலாபத்தைக் கணிக்க.

x) *2018* மார்ச் *31*ல் உரிமையாண்மையின் பெறுமதியினைக் காண்க.

(2x10= *20* புள்ளிகள்)

## பகுதி - I வணிகக் கல்வி

- **இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

*2.* i) அ) பொருள் என்றால் என்ன?

ஆ) மனிதனின் சிக்கலான தேவைகளாக இனம்காணப்பட்ட தேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(*2* புள்ளி)

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.

அ) தேவை புள்ளிவிபர ரீதியில் மிகக் குறைவான அளவே காணப்படுகின்றது.

ஆ) முயற்சியாளர் உற்பத்திக்காரணிகளை ஒழுங்குபடுத்தும் கருமத்தை மாத்திரமே மேற்கொள்கின்றார்.

இ) வாடிக்கையாளரின் கொள்வனவு செய்யும் நடத்தைப் பாங்கில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வணிகக் கருமங்களில் மிக நெருக்கமான தாக்கத்தையேற்படுத்தாது

ஈ) வரவு செலவுத் திட்டக்கொள்கை பொருளாதாரச் சூழலிற்குரிய காரணியொன்றாகும்.(*2* புள்ளி)

iii) அரசானது பொலித்தீன் பாவனையினை தடைசெய்ததன் காரணமாக ரவீந்திரன் தனது பிரதேசத்தில் வாழைச்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து கமத்தொழில் சேவைத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் வாழையிலைகளைக் கொள்வனவு செய்து அவற்றைக் காயவைத்துப்பதப்படுத்தி உணவுகளைப் பொதிசெய்யக் கூடிய பொதிகளைத் தயாரிக்கும் வணிகமொன்றை ஆரம்பித்தார்.

அ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படுகின்ற வணிகத்தில் அக்கறை காட்டும் 02 பிரிவினர்களைத் தருக.

ஆ) உற்பத்திக் காரணியொன்றைக் குறிப்பிட்டு அதற்குரிய உதாரணமொன்றை மேலுள்ள சம்பவத்திலிருந்து எடுத்துக்காட்டுக. (*2* புள்ளி)

iv) கூட்டுறவு கிராமிய வங்கியினூடாக குறைந்த வட்டியின் கீழ் சிற்றளவு வணிகங்களுக்கு வழங்கப்படுகின்ற கடனைப் பெற்ற ஜின்னா. பழப்பான உற்பத்தி வணிகமொன்றை ஆரம்பித்தான்.

அ) இவ்வணிகத்தில் தாக்கம் செலுத்துகின்ற புறச்சூழல் காரணியைக் குறிப்பிடுக.

ஆ) ஜின்னா வணிகத்திற்கு காணப்படுகின்ற வாய்ப்பொன்றைத் தருக. (*2* புள்ளி)

3. i) அ) காசோலையில் புறக்குறிப்பிடல் என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ) வங்கியில் நடைமுறைக் கணக்கைப் பேணுவதனால் கிடைக்கப்பெறும் இரு நன்மைகளைத் தருக. (2 புள்ளி)

ii) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை அல்லது பொய்" என்பதைக்குறிப்பிடுக.

அ) கடன் அட்டையொன்றினூடாக குறித்த வரையறுக்கப்பட்ட தொகை வரை காசாகவும் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ) கூட்டம் ஒரு உள்ளக மற்றும் வாய்மொழி மூலத் தொடர்பாடல் முறையொன்றாகும்.

இ) மீள் விற்பனைக்காக கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரத்தின் பண்பொன்றல்ல

ஈ) ஆதனக் காப்புறுதியின் போது காப்புறுதி ஒப்பந்தத்தின் பத்திரத்தை சாட்டுதல் செய்ய முடியாது. (2 புள்ளி)

iii) சுமந்திரன் நுவரெலியாவில் மலர் உற்பத்தி செய்பவர்களிடமிருந்து மலர்களைக் கொள்வனவு செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு இயற்கையான மலர்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்திச்செல்கின்றார்.

அ) வெளிநாட்டு வியாபாரம் என்றால் என்ன?

ஆ) சுமந்திரன் சிங்கப்பூருக்கு மலர்களை ஏற்றுமதி செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகப்பொருத்தமான போக்குவரத்து ஊடகத்தைக் குறிப்பிட்டு, அந்த ஊடகத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலமொன்றைத் தருக. (2 புள்ளி)

iv) PLC நிறுவனத்தின் கிளை முகாமையாளர்களின் கூட்டமொன்று நடைபெறுவதாகவும், அதில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டுமெனத் தெரிவித்து முகாமைத்துவப்பணிப்பாளரினால் சகல கிளை முகாமையாளர்களுக்கும் இலத்திரனியல் அஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப அக்கூட்டத்தில் கலந்துகொள்வதாக சகல கிளை முகாமையாளர்களும் இலத்திரனியல் அஞ்சல் மூலமான செய்தியொன்றை முகாமைத்துவப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளனர்.

அ) மேலே தரப்பட்ட நிகழ்வின் உதவியுடன் கீழே தரப்பட்டுள்ள தொடர்பாடல் அடிப்படைகளுக்குரிய உதாரணங்களைத் தருக.

| அடிபப்படைகள் | நிகழ்விலுள்ள உதாரணம் |
|---|---|
| அனுப்புபவர் | |
| பெறுபவர் | |

(1 புள்ளி)

ஆ) பொருத்தமான தொடர்பாடல் முறையொன்றைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய இரு காரணிகளைத் தருக. (1 புள்ளி)

4. i) ரஹ்மான் பதப்படுத்திய தோல்களைப்பயன்படுத்தி நீரிழிவு நோயாளர்கள் அணியக் கூடிய விசேடவகைப்பாதணிவகையொன்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்றார்.

அ) இலக்குச் சந்தை என்றால் என்ன?

ஆ) ரஹ்மான் வணிகத்தின் இலக்குச் சந்தையைக் குறிப்பிடுக.

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.

அ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் பங்காளர்களின் பொறுப்பானது அவர்கள் கம்பனியில் முதலீடு செய்த மூலதனத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை

ஆ) பொருளொன்றினை உற்பத்தி செய்வதிலிருந்து அது நுகர்வோனின் கையினை அடையச் செய்யும் செயன்முறை சந்தைப்படுத்தலாகும்.

இ) முகாமையாளர்கள் ஊழியர்கள் செய்ய வேண்டிய கருமங்களில் அவர்களை ஈடுபடுத்துதல் நெறிப்படுத்தலாகும்.

ஈ) வரையறுக்கப்பட்ட வளங்களிலிருந்து உச்சபயனைப் பெற்றுக்கொள்ளல் வினைதிறனாகும். (½x4= 2 புள்ளி)

iii) நறுமணப் பூச்சுக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் முகாமையாளர்களின் 04 கருமங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. உத்தேச கழிவினை நடைமுறைப்படுத்துவதினூடாக அதில் எதிர்பார்த்த விற்பனை வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதா எனத் தேடிப்பார்த்தல்

B. தற்போதைய உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்

C. உற்பத்தி செய்த பொருட்களை விநியோகிப்பதற்கு வானொன்றைக் கொள்வனவு செய்தல்

D. இலவசமாக பொருளின் மாதிரி (சாம்பல்) யினை விநியோகிப்பதற்கு அழகுக்கலை தொடர்பான கருத்தரங்கொன்றை நடாத்துதல்.

ஆ) மேலே தரப்பட்ட கருமங்கள் சந்தைப்படுத்தல் கலவையில் எம்மாறிக்கு உட்பட்டது என்பதைத் தருக. (2 புள்ளி)

iv) அ) திட்டமிடல் என்றால் என்ன?

ஆ) பரமேஸ்வர மத்திய மகா வித்தியாலத்தின் வணிகச் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற வணிகத் தினமானது இம்முறையும் சிறப்பாக நடாத்தப்பட்டதுடன் அதற்காக பின்பற்றிய படிமுறைகளில் சில பின்வருமாறு. வணிக தினத்திற்கான தலைப்பினைத் தீர்மானித்து அதன் பின்னர் உயர்தர வர்த்தக மாணவர்களிலிருந்து தேவையான குழுக்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. வணிகப் பாடப்பொறுப்பாசிரியர் மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியதுடன் ஒவ்வொரு குழுவும் உரிய முறையில் செயற்படுகின்றதா என்பது அவரினால் தேடிப்பார்க்கப்பட்டது. முகாமைத்துவக் கருமங்கள் 02ஐக் குறிப்பிட்டு நிகழ்விலிருந்து அதற்கான உதாரணம் தலா ஒன்று வீதம் தருக. (2 புள்ளி)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II - கணக்கீடு

♦ **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

5. i) அ) சொத்து என்றால் என்ன?

ஆ) வணிகமொன்றில் உரிமை மாற்றமடைகின்ற இரு சந்தர்ப்பங்களைத் தருக. (2 புள்ளி)

ii) பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்ற இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி பூரணப்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் | மூல ஏடு | இரட்டைப்பதிவு |
|---|---|---|---|
| 1. காசு விற்பனை ரூ. 2000 | ................................ | காசேடு | ........................................................ |
| 2.............................. | நாட்குறிப்புக் கச்சாத்து | ......................... | அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு 1000<br>கடன்பட்டோன் கணக்கு செலவு 1000 |

iii) 2017.01.01 இல் ரூபா 800 000 மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அனுலா வணிகத்தில் 2017 ஜனவரி 31ல் முடிவுற்ற மாதத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல் இடம்பெற்றன.

1) வங்கியிலிருந்து பெற்ற கடன் ரூபா 500 000
2) ரூபா 75 000 கிரயம் கொண்ட பொருட்கள் ரூபா 85 000 விற்கு கடனுக்கு விற்பனை
3) மின்சாரக் கட்டணம் ரூபா 4000 காசாக செலுத்தப்படல்
4) விற்பனைக்கான சரக்குகள் கடனுக்கு கொள்வனவு ரூபா 6 300
5) உரிமையாளர் தனது தனிப்பட்ட தேவைக்காக பற்றிய காசு ரூபா 5000

***தேவைப்படுவது***

ஆ) மேற்குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்துகின்ற தாக்கத்தை காட்டுக. 1வது கொடுக்கல் வாங்கல் உதாரணமாகத் தரப்பட்டுள்ளது. (பின்வரும் முறையிலான மாதிரியினைப் பயன்படுத்துக)

| கொடுக்கல் வாங்கல் | சொத்து = பொறுப்பு + உரிமை |
|---|---|
| 01 | + 500 000 = + 500 000 - (வங்கிக் கடன்) |
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |

ஆ) ஜனவரி மாத முடிவில் உரிமையின் பெறுமதியினைக் கணிக்க. (4 புள்ளி)

iv) சதாம் வணிகத்தின் 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கடன் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

*வேண்டப்படுவது*

1) ஜனவரி மாதத்திற்குரிய விற்பனை நாட்குறிப்பினைத் தயாரித்தல்

2) உரிய பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்தல் (4 புள்ளி)

(12 புள்ளி)

6. i) வங்கிக் கூற்று, வங்கி இணக்கக் கூற்று என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளி)

ii) அமரன் வணிகத்தின் 2018 மார்ச் மாதத்தில் தயாரித்த வங்கிக் கணக்கின் மீதி ரூபா 26 000 ஆகக் காணப்பட்டதுடன், வங்கிக் கூற்றின் மீதியானது வேறோர் மீதியைக் காட்டியது. இவ்வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்னர் பின்வருவன இனங்காணப்பட்டன.

அ) வங்கியானது நிலையியற் கட்டளையின் பேரில் கட்டட வாடகையாக ரூபா 1200 வை செலுத்தியிருந்ததுடன், வங்கிக் கட்டணமாக ரூபா 800 வை அறவிட்டிருந்தது.

ஆ) மார்ச் மாதத்தினுள் விநியோகிக்கப்பட்டும் இன்னும் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படாத காசோலையின் பெறுமதி ரூபா 7000 ஆகும்.

இ) கடன்பட்டோர் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்த தொகை ரூபா 4300 ஆகும்.

ஈ) மாதத்தினுள் வங்கியில் வைப்புச் செய்த தொகை ரூபா 80000 ஆகக் காணப்பட்டதுடன், வங்கிக் கூற்றில் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 70 000 ஆகும்.

*வேண்டப்படுவது,*

1) செம்மையாக்கப்பட்ட வங்கிக் கணக்கு (2 புள்ளி)

2) வங்கி இணக்கக் கூற்று (2 புள்ளி)

iii) சத்தியா வணிகம் 2018 ஜனவரி மாதத்திற்கு தயாரித்த பரீட்சை மீதியின் வரவு நிரலின் மொத்தமானது செலவு நிரலின் மொத்தத்தை விட ரூபா 8530 ஆல் குறைவாகக் காணப்பட்டது. அவ்வித்தியாசமானது தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டிடுபிடிக்கப்பட்டன.

அ) காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்திய ரூபா 1700 காப்புறுதிக் கணக்கில் ரூபா 170 எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆ) விற்பனைப் பட்டியல் ரூபா 8000 எந்த ஏடுகளிலும் பதிவுசெய்யப்படாது விடுபட்டிருந்தது.

இ) விளம்பரக் கட்டணமாகச் செலுத்திய ரூ. 7000 காசோலை வங்கிக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

*வேண்டப்படுவது*

அ) மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்குரிய நாட்டுகுறிப்புப் பதிவுகள்

ஆ) தொங்கல் கணக்கு (4 புள்ளி)

iv) வசந்தி வணிகத்தில் 2018 ஜனவரி மாதத்தினுள் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றிருந்தன.

1) கடன் கொள்வனவு
நிமலன் ரூ. 7000
சிறிதரன் ரூ. 4000

2) கடன் விற்பனை
சியாம் ரூ. 12000
சாலி ரூ. 8000

3) ரூபா 400 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று இந்திரா கம்பனியிடமிருந்து கடனுக்கு கொள்வனவு

| திகதி | பட்டியல் இல | வாடிக்கையாளர் | பட்டியல் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 2017.01.05 | 0251 | [illegible] | 15 750 |
| 2017.01.15 | 0252 | [illegible] | 8 500 |
| 2017.01.28 | 0253 | [illegible] | 5 400 |

*வேண்டப்படுவது*

1) மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

2) மேலே (3) இல் தரப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்குரிய பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினைத் தருக. (1 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளி)

7. i) அ) வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற பிரதான உருப்படிகள் 02 இனைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

ஆ) கிடைக்க வேண்டிய வருமானங்களை கணக்குகளின் பதிவுசெய்வதற்குரிய பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினைத் தருக. (1 புள்ளி)

ii) சாகிர் வணிகத்தில் 2017.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| விற்பனை | | 300 000 |
| கடன்பட்டோர் | 40 000 | |
| கடன் கொடுத்தோர் | | 35 000 |
| 10% வங்கிக் கடன் | | 100 000 |
| சரக்கிருப்பு (2017.01.01ல்) | 10 000 | |
| காணி | 350 000 | |
| கட்டடம் | 200 000 | |
| ஊழியர் சம்பளம் | 60 000 | |
| விளம்பரச் செலவு | 1 000 | |
| போக்குவரத்துச் செலவு | 6 000 | |
| அறிவடமுடியாக் கடன் | 4 000 | |
| கொள்வனவு | 140 000 | |
| உட்சுமைக் கூலி | 7 000 | |
| எழுதுகருவிகள் | 9 000 | |
| மூலதனம் | | 398 000 |
| கடன் வட்டி | 6 000 | |
| | 833 000 | 833 000 |

மேலதிகத் தகவல்கள் பின்வருமாறு

1) 2017.12.31ல் எஞ்சிய சரக்குகளின் பெறுமதி ரூபா 15 000

2) அட்டுறு செலவுகள் - போக்குவரத்துச் செலவுகள் ரூபா 1000
காப்பறுதி தவணைக் கட்டணம் ரூபா 3000

***வேண்டப்படுவது***

1) 2017.12.31ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று (4 புள்ளி)

2) 2017.12.31ல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று (4 புள்ளி)

iii) அ) நிறுவனமொன்றின் சரியான செயற்பாட்டுப் பெறுபேற்றினைக் கணிப்பதற்கு வருமானம் மற்றும் செலவுகளை முடிவுக் கணக்குகளில் பதிவு செய்யும் போது பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு எண்ணக்கரு எது?

(1 புள்ளி)

ஆ) தனியுரிமை வணிகங்கள் நிதியாண்டு முடிவில் தயாரிக்கின்ற நிதிக்கூற்றுக்களைத் தருக. (1 புள்ளி)